**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், வலங்கைமான்.**

2025ம் ஆண்டு ஜூலை மாதம் 24 ம் நாள் வியாழக் கிழமை

**அசல் வழக்கு எண். 06/2021**

வாதி தரப்பு சாட்சியாக PW. 2 ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டின் 44வது சட்ட ஏற்பாடின் படி திரு. P. ஜேசுபாலன், எம்.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், வலங்கைமான் அவர்களால் ஆணையிடப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாஸ்கரன் | Father Name | : | ராமைய்யன் |
| Village | : | மங்களம் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | விவசாயம் |
| Religion | : | | Age | : | 59 |

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு **விசாரணை** -

எனக்கு வாதியை சிறுவயதிலிருந்தே தெரியும். நான் இவ்வழக்கின் பிராதினை படித்துப்பார்த்தேன். பிராதினை என்னிடம் காண்பித்து என்னிடம் அறிவுரைப் பெற்று வாதி வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். இவ்வழக்கு விசாரணைக்கு வாதியுடன் நீதிமன்றம் வருவேன் என்றால் வருவேன் 2, 3 வாய்தாகளுக்கு வரவில்லை. நான் இவ்வழக்கினை நடத்துவதற்கு வாதிக்கு யோசனை சொல்வேன் என்றால் சரிதான். நான் வாதியுடன் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு சென்று வருவேன் என்றால் இல்லை. வாதிக்கு எங்கள் ஊரில் இவ்வழக்கு சொத்தினை தவிர எவ்வளவு சொத்துக்கள் உள்ளது என்றால் சரியாக தெரியாது ஆனால் 5, 6 ஏக்கர்கள் இருக்கும். மேற்படி சொத்துகளை யாரிடமிருந்து கிரயம் பெற்றார் என்ற விபரம் எனக்கு தெரியாது. அந்த 5, 6 ஏக்கர்களையும் நேரடியாக சாகுபடி செய்கிறார் என்றால் சரிதான். வழக்கு சொத்து எவ்வளவு விஸ்த்தீரணம் என்ற விபரம் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் எந்தெந்த வருடம் என்ன சாகுபடி செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் அருகில் எனது வயல் உள்ளது என்றால் சரிதான். அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தினை பிரதிவாதிகளிடம் எந்த வருடம் மாதத்தில் வாதி ஒப்படைத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. வாதி

பிரதிவாதிகளிடம் வழக்குசொத்தினை எந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒப்படைத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் அதுபற்றி வாதி பிரதிவாதிகளிடம் பேசிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். ஆகையால் வழக்கு சொத்தினை பிரதிவாதிகளிடம் எதன் அடிப்படையில் வாதி ஒப்படைத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதி பிரதிவாதிகளுக்கு வயலினை சாகுபடி செய்வதற்கு பணம் கொடுப்பார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதிகள் சரியான முறையில் குத்தகை பணம் வாதிக்கு கொடுக்கவில்லை என்று வாதி என்னிடம் கூறினார். முதல் விசாரணை வாக்குமூலத்தில் வாதி முக்கியஸ்தர்களிடம் முறையிட்டார் என்று சொல்லியுள்ளேன் அந்த முக்கியஸ்தர்களின் பெயர் என்ன என்று தெரியாது. பிரச்சனையின் போது பிரதிவாதிகள் வாதியிடம் என்ன கூறினார்கள் என்று எனக்கு தெரியாது. வாதிக்கும் பிரதிவாதிகளுக்கும் என்ன பிரச்சனை என்ற விபரம் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் மூங்கில் கொல்லையில் மூங்கில் வெட்டும்போது பிரதிவாதிகளுக்கும் எனக்கு பிரச்சனை ஏற்பட்டதா என்றால் பிரதிவாதிகளுக்கும் ஊர்காரர்களுக்கும்தான் பிரச்சனை ஏற்பட்டது. மூங்கில் வெட்டும்போது பிரதிவாதிகளை நீங்கள் சென்று மறித்தீர்களா என்றால் நான் ஊர்காரர்களுடன் சேர்ந்து மறித்தேன். ஊர்காரர்களுக்கும் பிரதிவாதிகளுக்கும் எந்த பிரச்சனையும் இல்லை உங்களுக்கும் பிரதிவாதிகளுக்கும் தான் பிரச்சனை என்றால் சரியல்ல. அந்த விரோதத்தின் காரணமாக நான் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.07.24 19:16:39 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.